**பூடான் மன்னர் மற்றும் ராணியின் அரசுமுறை இந்திய விஜயம்**

ஜனவரி 4, 2014

பூடான் மன்னர் மற்றும் ராணி, மேதகு ஜிக்மே கேசர் நம்கியால் வாங்சுக் மற்றும் ஜேட்சுன் பேமா ஆகியோர் அரசுமுறை விஜயமாக ஜனவரி 6-10ந்தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். பூடான் மன்னருடன் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் பொருளாதார விவகாரத்துறை அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக்குழுவினர் வருகை புரிகின்றனர்.

மேதகு பூடான் மன்னரை இந்தியா வருமாறு இந்திய குடியரசுத் தலைவர் வரவேற்றுள்ளார். குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள துவாரகா விருந்தினர் தங்கும் அறை தொகுப்பில் சுமார் 20 ஆண்டுகளுக்குப்பின் தங்குமாறு அழைக்கப்பட்டுள்ள முதலாவது வெளிநாட்டுத் தலைவர் ஆவார்.

இந்தியாவில் பூடான் மன்னர் குடியரசுத்தலைவரை சந்திக்கிறார். குடியரசுத் துணைத்தலைவர், பிரதமர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர், நிதி அமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்கட்சித் தலைவர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் வெளியுறவுத்துறை செயலர் ஆகியோர் பூடான் மன்னரை சந்திக்கின்றனர்.

இந்தியா மற்றும் பூடான் இடையேயான தனித்துவம் மிக்க உறவு நெருங்கிய நட்புறவுடனும், ஆழமான புரிந்துணர்வுடனும் பரஸ்பரம் நம்பிக்கையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. பூடான் மன்னரின் வருகை இரு நாடுகளின் இடையே வளர்ந்து வரும் இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் பங்களிக்கும்.

**புது தில்லி**
**ஜனவரி, 4, 2014**